tamilguru.lk

# மாகாண கல்வி அமைச்சு – தென் மாகாணம்

## தென் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக கல்விமாணி பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 2 ம் வகுப்பு – II தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்காக விண்ணப்பம் கோரல் 2023

தென் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் வெற்றிடங்களுக்காக தென் மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவையின் 2 ம் வகுப்பு – II தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்காக இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் தகைமைகள் கொண்டுள்ள தென் மாகாணத்தில் நிரந்தர வதிவிடம் கொண்ட கல்விமாணி பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல பாடங்களுக்காக பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதுடன் நிலவும் நிதி ஏற்பாடுகள் மற்றும் பணித்தேவைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். இதன் போது நேர்முகப்பரீட்சையின் மூலம் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் பிரயோக பரீட்சைக்கு வரவழைக்கப்படுவதுடன் அதில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் கூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளின் தகுதி தரவரிசையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

2. **சம்பள அளவு** :

   இப்பதவியின் சம்பள அளவு 2022.01.05 ஆந் திகதிய இலக்கம் 03/2016(iv) கொண்ட அரச பொது நிருவாக சுற்றறிக்கைற்கு அமைய ரூபா. 39,175 – 10x825 – 7x1,335 – 20x1,630 - ரூபா. 89,370/- (ஜீ.இ.-1-2016) ஆகும். நீங்கள் இந்த சம்பள அளவில் கட்டம் 03 இல் ரூபா 40,825/- சம்பள மட்டத்தில் அமர்த்தப்படுவீர்கள்.

3. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்** :

3.1 கல்வித் தகைமைகள் :

i. ஆசிரியர் நியமனங்களுக்குரியதாக அங்கீகரிக்கப்பட்ட விசேடமான பாடத்துறைகளுக்குரிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தின் மூலம் அல்லது பெற்றுக் கொண்ட பின்வரும் உப அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுடன் தொடர்பான கல்விமாணி பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும். அது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் செல்லுபடியாகும் பட்டமாக இருத்தல் வேண்டும்.

மற்றும்

ii. க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் தாய்மொழி மற்றும் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் மூன்று பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரு தடவையில் குறைந்தபட்சம் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்)

மற்றும்

iii. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரு தடவையில் மூன்று (03) பாடங்கள் உள்ளடங்களாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மிக முக்கியம்** : (விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டும்.)

- தனது பட்டத்தின் படி விண்ணப்பிக்க முடியுமான பாடங்கள் தொடர்பில் விண்ணப்பதாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.

- அதன் போது சிறப்பு கொண்ட பாடம் / கற்றல் பாடம் என்பதற்கு ஏற்ப விண்ணப்பிக்க வேண்டும்.
- இரண்டு பாடங்களுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
- விண்ணப்பிக்கப்பட்ட பாடம் மற்றும் மொழி மூலம் பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.
- 1988.08.18 ஆம் திகதிய 27/88 ஆம் இலக்க "அங்கவீனர்களுக்கு தொழில் வழங்கல்" எனும் அரச பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3.2 உடல் மற்றும் உளத் தகுதி –

சகல விண்ணப்பதாரியும் ஆசிரியர் ஒருவராக கடமையாற்ற தகுந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

3.3 வயது

விண்ணப்ப முடிவுத் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாதும் இருக்க வேண்டும்.

3.4 ஏனைய தகைமைகள் –

I. விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரி நற்சான்றிதழ் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
III. விண்ணப்பதாரி அல்லது வாழ்க்கைத்துணை , விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முந்திய 03 வருடங்களுக்கு குறையாத காலம் தென் மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும். (கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட வதிவுச் சான்றிதழ் (டீ.எஸ். 04) மூலம் நேர்முகப் பரீட்சையின் போது வதிவை உறுதிப்படுத்த வேண்டும்)
IV. பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் விண்ணப்பதாரிகள் தனது

விருப்பத்திற்கு ஏற்ப 05 பிரதேச செயலகப் பிரிவுகளை பெயரிட முடியும் ( முதலாம் தெரிவாக, தனது நிரந்தர வதிவிடம் கொண்டுள்ள பிரதேச செயலகப் பிரிவு இருத்தல் வேண்டும்)

V. ஏதேனும் ஒரு பாடம் தொடர்பில் குறித்த பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தர வதிவுடைய பட்டதாரிகள் குறித்த வெற்றிடங்களை நிரப்ப போதுமானதாக இல்லாத போது மாத்திரம் ஏனைய செயலகப் பிரிவுகளின் விண்ணப்பதாரிகள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படும்.

VI. தென் மாகாணத்தில் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்ற முடியுமாக இருத்தல் வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள்** :

I. அரச / மாகாண சபை அரசாங்க சேவை நியமனங்களை கட்டுப்படுத்தும் பொது விதிகளுக்கும், தென் மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கும், அதற்கு செய்துள்ள மற்றும் எதிர்வரும் காலங்களில் செய்யப்படும் திருத்தங்களுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 2ம் வகுப்பு – II தரத்திற்கு நியமிக்கப்படுவார்கள்.

II. இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியம் உரித்துடையதகும். இப் பதவிக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பில் அரசினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நியமனம் பெறுவோர் உடன்படுதல் வேண்டும்.

III. நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

IV. தென் மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் பதவி உயர்வு வழங்கப்படும்.

V. 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க அரச பொது நிருவாக சுற்றறிக்கை மற்றும் அதற்கு மேற்கொள்ளும் திருத்தங்கள் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ளவாறு இரண்டாம் அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு** :

5.1 ஆட்சேர்ப்பு முறை :

2008.07.01 ஆம் திகதி முதல் அமுலாக்கப்பட்ட தென் மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பின் 7.2.3.5 இன் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

தெரிவு செய்வதற்காக சாதாரண நேர்முகப் பரீட்சை ஒன்றும் பிரயோகப் பரீட்சை ஒன்றும் நடாத்தப்படும்.

சாதாரண நேர்முகப்பரீட்சையில் தகுதி பெறுவோர் பின்னர் பிரயோகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். (ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பின் 7.2.4.3. (அ) இன் படி அமுலாகும்)

பிரயோகப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கமைய ஆகக்கூடிய புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகள் பிரதேச செயலாளர் பிரிவில் நிலவும் வெற்றிடங்களுக்காக தெரிவு செய்யப்படுவர்.

இப் பரீட்சை அறிவித்தலின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்பு 2023.06.30

ஆம் திகதிக்கு நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மாத்திரம் உரித்தானதாகும்.

5.2 சாதாரண நேர்முகப் பரீட்சை –

சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் தொடர்புடையதாக பிரசுரிக்கப்படும் வர்த்தமானி அறிவித்தலில் அல்லது பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை கொண்டுள்ளாரா என்பதை பரீட்சித்தல் மற்றும் உடல் தகுதிகளை பரீட்சித்தல்.

5.3 பிரயோகப் பரீட்சை –

பிரயோகப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் சமர்பிப்புக்களை மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இல. | பிரயோகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் நியதிகள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு |
|---|---|---|---|
| 01 | நோக்கமும் பிரவேசமும் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் வளம் | 05 | 02 |
| 03 | தொடர்பாடலில் தெளிவு | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | சமர்பிப்புத் திறமைகள் | 05 | 02 |
| | **மொத்தப் புள்ளிகள்** | **25** | **10** |

5.4 பிரயோகப் பரீட்சை முறைகள் –

I. பிரயோகப் பரீட்சைக்காக 05 நிமிடங்களுக்கு குறையாத காலம் வழங்கப்படும்.
II. பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொள்ளக்கூடிய உயர்ந்த பட்ச புள்ளிகளின் அளவு 25 ஆகும்.
III. பிரயோக பரீட்சையில் சித்தியடைவதற்கு அவ்வவ் நியதிகளுக்காக குறைந்த பட்சம் 02 புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ள வேண்டும்.
IV. பிரயோக பரீட்சை மதிப்பீடுகள் தென் மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை குழுவினால் மேற்கொள்ளப்படும்.

5.5 நியதிகளின் நோக்கம் –

I. நோக்கமும் பிரவேசமும்
வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்தல் மற்றும் பாட பிரவேச இயலுமையினை மதிப்பீடு செய்தல்.

II. ஆளுமை மற்றும் குரல் வளம்
ஆசிரியராக சிறந்த ஆளுமை கொண்ட மற்றும் கற்பிப்பதற்கு சிறந்த குரல் வளப்பிரயோகத்தினை மதிப்பீடு செய்தல்

III. தொடர்பாடலில் தெளிவு
கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் உரிய விடயங்களை பயன்மிக்கதாக தெரிவிக்கக்கூடிய இயலுமையினை மதிப்பீடு செய்தல்.

IV. நேர முகாமைத்துவம்
பெற்றுக் கொள்ளப்படும் கால எல்லைக்குள் நோக்கத்தை எட்டக்கூடிய திறமைகளை மதிப்பீடு செய்தல்.

V. சமர்பிப்புத் திறமைகள்
நோக்கத்தை எட்டுவதற்கான சமர்பிப்புக்கள் கலைசார் முறைகளை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான இயலுமைகளை மதிப்பீடு செய்தல்.

6. பரீட்சைக் கட்டணம் :

பரீட்சைக் கட்டணமாக ரூபா. 600/- ஐ தென் மாகாண கல்வி அமைச்சின் சரப் அதிகாரியிடம் தென் மாகாண பிரதான செயலாளரின் இலக்கம் 2003.2.13 இற்கு வரவு வைக்கும் வகையில் பணமாகச் செலுத்தி உங்களின் பெயருக்கு பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டினை நேர் முகப் பரீட்சையின் போது சமர்பிக்க வேண்டும்.

மேற்படி பற்றுச்சீட்டு தவிர்ந்த வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுக்கள், காசு வைப்புக்கள், கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது என்பதோடு, வேறு பரீட்சைக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது என்பதை கவனத்திற் கொள்க.

7. விண்ணப்பிக்கும் முறை –

I. சகல விண்ணப்பதாரிகளும் www.edumin.sp.gov.lk எனும் எமது இணையதளத்திற்கு பிரவேசித்து இந்த பரீட்சை அறிவித்தலுக்கு ஏற்ப உத்தியோக இணையதளத்திற்கு பதிவேற்றம் (Upload) செய்யப்பட்ட விண்ணப்பத்தினை தரவிறக்கம் (Download) செய்ய முடியும்.

II. குறித்த தகவல்களை வழங்கி விண்ணப்பத்தினை தனது கையெழுத்தினால் பூரணப்படுத்த வேண்டும்.

(ஆங்கிலத்தில் கெப்பிட்டல் எழுத்தின் மூலம் மாத்திரம் பூரணப்படுத்த வேண்டும்.) விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது செலுத்தப்பட்டுள்ள உப அட்டவணை 01,02 என்பவற்றை பயன்படுத்த வேண்டும்.

III. பூரணமற்ற தகவல்கள் செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள், அடிப்படை தகைமைகள் பூர்த்தியாகாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தி அனுப்பப்படும் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை விண்ணப்பதாரி வைத்திருப்பது கட்டாயம் என்பதோடு அதனை நேர்முகப் பரீட்சையின் போது சமர்பித்தல் வேண்டும்.

IV. விண்ணப்பிக்கும் பாடம், பாடங்களுக்கான விருப்பத் தெரிவு வரிசை (1,2) மற்றும் பிரதேச செயலகங்களின் வரிசை என்பன எக்காரணத்தை கொண்டும் பின்னர் மாற்றம் செய்ய முடியாது என்பதுடன் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பத்தினை மாத்திரமே சமர்பிக்கலாம்.

விண்ணப்பத்துடன் எந்தவித சான்றிதழ்களும் இணைத்து அனுப்பக் கூடாது.

V. விண்ணப்பதாரியின் ஒப்பத்தினை உறுதிப்படுத்துதல்

விண்ணப்பம் மற்றும் பரீட்சை அனுமதிப்பத்திரம் என்பவற்றில் பரீட்சார்த்தியின் ஒப்பத்தினை அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தியின் ஒப்பத்தினை அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பகிரங்க நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் கெஸட் செய்யப்பட்ட பதவி ஒன்றினை வகிக்கும் அதிகாரி, ரூபா 498,960/- அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளம்

பெறும் அரச, மாகாண அரசாங்க சேவை அல்லது பதவி நிலையில் நிரந்தர உத்தியோகம் வகிக்கும் அதிகாரி, பௌத்த விகாரை ஒன்றின் தலைமை மதகுரு, மதகுருக்களில் குறிப்பிடத்தக்க தரத்தில் அங்கம் வகிக்கும் ஒருவர் ஆகியவர்களில் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

தற்போது அரசாங்க சேவையில் உள்ள ஒருவரின் ஒப்பத்தினை குறித்த திணைக்களத்தின் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் விண்ணப்பம் நிறுவனத் தலைவரினூடாக செலுத்தப்பட வேண்டும்.

VI. விண்ணப்பங்கள் அனுப்பும் இறுதித் திகதி 2023.10.30 ஆகும்.

VII. தரவிறக்கம் செய்து சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை **விண்ணப்பதாரியின் ஒப்பத்துடன் மற்றும் ஒப்பத்தினை உறுதிப்படுத்தியதன் பின்னர்** 2023.10.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இத்திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

செயலாளர்,
தென் மாகாண கல்வி அமைச்சு,
தரைத்தளம், 'தக்ஷினபாய' அமைச்சு வளாகம்,
லபுதுவ, காலி.

விண்ணப்ப படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக **'தென் மாகாண அரசாங்க சேவையின் ஆசிரிய**

**வெற்றிடத்திற்காக கல்விமாணி பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் – 2023'** என்பதையும் தாம் **விண்ணப்பிக்கும் பாடங்கள் 02 யும்** குறிப்பிட வேண்டும்.

8. தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. இப் பரீட்சையை பிற்போடுதல், இரத்துச் செய்தல் அல்லது நடாத்திய பின் தெரிவு செய்தல்/ செய்யாதிருத்தல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய இறுதித் தீர்மானம் மற்றும் இவ்வறிவித்தலில் உட்படாத ஏதாவது மற்ற விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமையும் தென் மாகாண கல்வி அமைச்சிற்குரியதாகும்.

10. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவதில்லை. நேர்முகப்பரீட்சைக்காக அழைப்புக் கடிதம் மற்றும் நேர் முகப்பரீட்சை நேரம் பற்றிய அறிவிப்பு தென் மாகாண கல்வி அமைச்சின் உத்தியோக இணையதளத்தில் www.edumin.sp.gov.lk பிரசுரிக்கப்படும். அது பற்றி குறுஞ்செய்தி மூலமும் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

11. குறித்த அறிவித்தலுக்கு ஏற்ப நேர் முகப்பரீட்சை நேர அட்டவணையில் உங்களின் விபரம் உள்ளடக்கப்பட்டிருக்காத பட்சத்தில் அது பற்றி தென் மாகாண கல்வி அமைச்சிடம் அறியப்படுத்துதல் வேண்டும். அதன் போது நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றுடன் மற்றும் பதிவுத் தபாலிட்ட இலக்கம் மூலம் அது தொடர்பில் தென் மாகாண கல்வி அமைச்சின் கல்விப் பிரிவில் விசாரிக்க வேண்டும்.

12. வர்த்தமாணி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்திருப்பார்கள் என்ற

முடிவின் அடிப்படையில் விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை கட்டணம் செலுத்தி விண்ணப்பத்தினை நிகழ் நிலை மூலம் செலுத்திய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் சகல பரீட்சார்த்திகளும் தகைமை கொண்டிருப்பர் என்ற கருதுகோளின் அடிப்படையில் பரீட்சைக்கு தோற்ற இடமளிக்கப்படும். பரீட்சைக்கு தோற்ற அனுமதிப்பது என்பது தகைமை கொண்டதற்கான ஏற்புடைமையாக கருத முடியாது. விண்ணப்பதாரி தகைமை கொண்டிராதவர் என அறியவரும் எந்த சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தித் தகைமையை இரத்துச் செய்யவும் மற்றும் நியமனம் வழங்குவதை நிராகரிக்கவும் அதிகாரம் தென் மாகாண கல்வி அமைச்சிற்கு உண்டு.

13. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிப் பிரயோகத்தில் ஏதேனும் ஒரு பொருத்தப்பாடின்மை ஏற்படின் சிங்களம் மூலமான மொழிப் பிரயோகம் ஏற்புடையதாகும்.

14. நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமனத் திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் பதவி ஏற்க வேண்டும். அவ்வாறு பதவி ஏற்க தவறும் பட்சத்தில் மறு அறிவித்தலின்றி நியமனம் இரத்தாகும்.

## உப அட்டவணை 01

வெற்றிடங்கள் காணப்படும் பாடங்கள் மற்றும் மொழி மூலம் இங்கு காட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழி தெரிவு செய்யப்பட வேண்டும்

| தொடர் இல. | பாடம் |
|---|---|
| 01 | ஆரம்பக் கல்வி |

| | |
|---|---|
| 02 | ஆங்கிலம் |
| 03 | நடனம் (சிங்களம் / உள்நாட்டு) |
| 04 | நடனம் (பரதம்) |
| 05 | சங்கீதம் (கீழைத்தேய) |
| 06 | சங்கீதம் (மேலைத்தேய) |
| 07 | சங்கீதம் (கர்நாடக) |
| 08 | நாடகமும் அரங்கியலும் |
| 09 | சித்திரம் |
| 10 | விஞ்ஞானம் |
| 11 | கணிதம் |
| 12 | புவியியல் |
| 13 | குடியியற் கல்வி |
| 14 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் |
| 15 | கொரியன் |
| 16 | ஜப்பான் |
| 17 | இரண்டாம் மொழி (தமிழ்) |
| 18 | மனைப் பொருளியல் |
| 19 | சிங்கள மொழியும் இலக்கியமும் |
| 20 | தமிழ் மொழியும் இலக்கியமும் |
| 21 | வரலாறு |
| 22 | சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 23 | கணக்கீடு |
| 24 | வணிகக் கல்வி |
| 25 | பொருளியல் |

| | |
|---|---|
| 26 | இரசாயனவியல் |
| 27 | பௌதீகவியல் |
| 28 | உயிரியல் |
| 29 | விவசாய விஞ்ஞானம் |
| 30 | இணைந்த கணிதம் |
| 31 | பொறியியற் தொழில் நுட்பவியல் |
| 32 | உயிர் முறைமைகள் தொழில் நுட்பவியல் |
| 33 | தொழில் நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 34 | தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியல் |
| 35 | சுகாதாரம் மற்றும் சமூக நலன்பேணல் |
| 36 | உடற்கல்வி மற்றும் விளையாட்டு |
| 37 | அரங்காற்றுகை கலைகள் |
| 38 | நிகழ்ச்சி முகாமை |
| 39 | கலையும் கைப்பணியும் |
| 40 | உள்ளக வடிவமைப்பு |
| 41 | நவநாகரீக வடிவமைப்பு |
| 42 | கிரபிக் வடிவமைப்பு |
| 43 | நிலத்தோற்ற வடிவமைப்பு |
| 44 | கால்நடை உற்பத்தி தொழில் நுட்பக் கற்கைகள் |
| 45 | உணவு உற்பத்தி தொழில் நுட்பக் கற்கைகள் |
| 46 | நீரியல் வள தொழில் நுட்ப கற்கைகள் |
| 47 | நிர்மாண தொழில் நுட்ப கற்கை |

| | |
|---|---|
| 48 | மோட்டாரியல் தொழில் நுட்ப கற்கைகள் |
| 49 | மின் மற்றும் இலத்திரனியல் தொழில் நுட்ப கற்கைகள் |
| 50 | புடவை மற்றும் ஆடைத் தொழில் நுட்ப கற்கைகள் |
| 51 | உலோக நிர்மாண தொழில் நுட்ப கற்கைகள் |
| 52 | அலுமினிய நிர்மாண தொழில் நுட்ப கற்கைகள் |
| 53 | கணினி வன்பொருள் மற்றும் வலைபிண்ணல் |
| 54 | உற்பத்தி |
| 55 | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் |
| 56 | விஷேட கற்கைகள் |

## உப அட்டவணை 02

## விண்ணப்பதாரிகள் தெரிவு செய்ய வேண்டிய பிரதேச செயலகப் பிரிவுகள்

| தொடர் இலக்கம் | பிரதேச செயலகப் பிரிவு |
|---|---|
| 101 | அக்மீமன |
| 102 | அம்பலாங்கொடை |
| 103 | பத்தேகம |
| 104 | பலபிட்டி |
| 105 | பெந்தோட்டை |
| 106 | போப்பே போத்தல |
| 107 | எல்பிட்டி |
| 108 | காலி |
| 109 | கோனபின்னுவல |
| 110 | ஹபராதுவ |
| 111 | ஹிக்கடுவ |
| 112 | இமதுவ |
| 113 | கரந்தெனிய |
| 114 | நாகொட |

| | |
|---|---|
| 115 | நெலுவ |
| 116 | நியாகம |
| 117 | தவலம |
| 118 | வெலிவிட்டிய திவிதுர |
| 119 | யக்கலமுல்ல |
| 120 | வந்துரம்ப |
| 121 | ரஜ்கம |
| 122 | மாதம்பாகம |
| 123 | அக்குரஸ்ஸ |
| 124 | அத்துரலிய |
| 125 | தெவிநுவர |
| 126 | திக்வல்ல |
| 127 | ஹக்மன |
| 128 | கம்புறுபிட்டிய |
| 129 | கிரிந்தை புகுல்வெல்ல |
| 130 | கொடபொல |
| 131 | மாலிம்பட |
| 132 | மாத்தறை |
| 133 | முலட்டியான |
| 134 | பஸ்கொட |
| 135 | பிட்டபத்தற |
| 136 | திஹகொட |
| 137 | வெலிகம |
| 138 | வெலிபிடிய |
| 139 | அம்பலாந்தோட்டை |
| 140 | அங்குனகொலபெலஸ்ஸ |
| 141 | பெலியத்த |
| 142 | அம்பாந்தோட்ட |
| 143 | கட்டுவன |
| 144 | லுனுகம்வெகர |
| 145 | ஒக்வெல |
| 146 | சூரியவெவ |
| 147 | தங்கல்ல |
| 148 | திஸ்ஸமகாராம |
| 149 | வலஸ்முல்ல |
| 150 | வீரகெட்டிய |